திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு முத்தமிழறிஞரின் செம்மொழி நாள் மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கும் தெருமுனை தொடர் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருச்சியில் நடைபெற்ற கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த கலைஞர் அவர்களின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு, அனைத்து ஒன்றிய-நகர-பகுதி-பேரூர்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்த வேண்டும் என்று கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கிணங்க கீழ்கண்ட அட்டவணைப்படி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் தலைமையில் நடைபெறுகிறது.

| வ. எண் | நாள் | ஒன்றியம், நகரம், பேரூர் | இடம் | பேச்சாளர் | ஏற்பாட்டாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 21.06.2025 | திருத்தணி வடக்கு ஒன்றியம் | என்.என்.கண்டிகை | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி | ஏ.எல்.விஜயகுமார் / மா.சதீஷ்குமார். சௌ.ராஜேஷ் |
| 02 | 22.06.2025 | பூண்டி மேற்கு ஒன்றியம் | பூண்டி | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி | தா.கிறிஸ்டி / இ.ஹேமநாதன் |
| 03 | 23.06.2025 | இரா.கி.பேட்டை மேற்கு ஒன்றியம் | தாமனேரி | குடியாத்தம் புவியரசி / இளம் பேச்சாளர் மா.பூபதி | மா.இரகு / ர.ரஞ்சித், ரா.ராஜா |
| 04 | 24.06.2025 | பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் | வெளியகரம் | நெல்லிகுப்பம் புகழேந்தி | சி.ஜே.சீனிவாசன் / அ.கலீல் |
| 05 | 24.06.2025 | பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம் | கர்லம்பாக்கம் | இளம் பேச்சாளர் க.ரா.சந்தியா | பி.டி.. சந்திரன் / ரா.மணிகண்டன் |
| 06 | 24.06.2025 | பொதட்டூர்பேட்டை பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | தருமபுரி அதியமான் | டி.ஆர்.கே.பாபு / நா.அ.சத்யா |
| 07 | 26.06.2025 | இரா.கி.பேட்டை தெற்கு ஒன்றியம் | சாணூர் மல்லாவரம் | காவேரிப்பட்டணம் இளையராஜா | பெ.பழனி / கார்த்திக் |
| 08 | 27.06.2025 | பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியம் | நொச்சிலி | சேலம் சுஜாதா | ஜி.ரவீந்தரா / மு.பாலகிருஷ்ணன் |
| 09 | 28.06.2025 | திருத்தணி கிழக்கு ஒன்றியம் | வேலஞ்சேரி | சேலம் சுஜாதா | ஆர்த்தி ரவி / கே.காளிதாஸ் |
| 10 | 29.06.2025 | இரா.கி.பேட்டை கிழக்கு ஒன்றியம் | வங்கனூர் | ஸ்ரீராம் | பா.சம்பத் / மு.சதீஷ் |
| 11 | 29.06.2025 | பள்ளிப்பட்டு பேரூர் | சந்தைபேட்டை | இளம் பேச்சாளர் க.ஷேவிதா | சி.ஜெ.செந்தில்குமார்/ உ.சதீஷ் |
| 12 | 30.06.2025 | திருத்தணி மேற்கு ஒன்றியம் | புச்சிரெட்டிபள்ளி | ஆரணி மாலா | என்.கே.கிருஷ்ணன் / வி.கோதண்டன் |
| 13 | 30.06.2025 | திருத்தணி தெற்கு ஒன்றியம் | எஸ்.அக்ரஹாரம் | அப்துல்ரகுமான் பாரி | கே.ராஜேந்திரன் / சி.பிரபுராஜ், வி.விஜய், வ.கணேசன் |
| 14 | 01.07.2025 | இரா.கி.பேட்டை வடக்கு ஒன்றியம் | பாலாபுரம் | தமிழ் சாதிக் | சி.என்.சண்முகம் / அன்பரசன் |
| 15 | 02.07.2025 | கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் | பேரம்பாக்கம் | எழும்பூர் கோபி | மோ.ரமேஷ் / உ.சரத்பாபு |
| 16 | 02.07.2025 | திருவள்ளூர் நகரம் | மீரா திரையரங்கம் அருகில் | தமிழ் சாதிக் | சி.சு.ரவிச்சந்திரன் / பவளவண்ணன் |
| 17 | 03.07.2025 | திருத்தணி நகரம் | நேரு நகர் | முரசொலி மூர்த்தி | திருத்தணி வி.வினோத்குமார் / ர.சதீஷ் |
| 18 | 04.07.2025 | திருவாலங்காடு மேற்கு ஒன்றியம் | சீதாபுரம் | வரகூர் காமராஜ் / இளம் பேச்சாளர் மா.பூபதி | கூளூர் எம்.ராஜேந்திரன் / ரா.யுவராஜ் |
| 19 | 05.07.2025 | கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் | விடையூர் | வண்ணைபுகாரி / இளம் பேச்சாளர் ஐஸ்வர்யா | க.அரிகிருஷ்ணன் / ரா.மோகனசுந்தரம் |
| 20 | 06.07.2025 | திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் | ராமலிங்கபுரம் | பழ.ராஜேந்திர பிரசாத் | எஸ்.மகாலிங்கம் / தி.நந்தகுமார் |

இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர். கழக கொள்கை பரப்புச் செயலாளரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர். எஸ்.ஜெகத்ரட்சகன், தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் ப.அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன்! கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன். திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ.சேகர், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர் இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன்,சி. ஜெயபாரதி. பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம்,வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்தரநாத், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே.பாபு, மா.புவனேஷ்குமார், டி.ஆர்.திலீபன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள் எனவே நிர்வாகிகள் கழக இளைஞர் அணி தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

பெரம்பலூர் மாவட்டக் கழக - முன்னாள் செயலாளர் - முன்னாள் எம்.பி.

# எஸ்.சிவசுப்ரமணியனின் 6 ஆம் ஆண்டு நினைவு தினம்!

## வீ.ஜெகதீசன் தலைமையில் எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை!

பெரம்பலூர், ஜூன் 18 -

பெரம்பலூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர், ஆண்டிமடம் தொகுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர்,போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கரின் தந்தை மறைந்த எஸ்.சிவசுப்ரமணியன் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது படத்திற்கு, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ. அண்ணாதுரை, மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ம. ராஜ்குமார் செ.நல்லதம்பி, தி.மதியழகன்,சிராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், டி.ஆர்.சிவசங்கர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, துணை அமைப்பாளர் ஜி.கே. மூர்த்தி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் செல்வராஜ், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல், வேப்பூர் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ரா. சிவா

மற்றும் மதுபாலன்,விஜி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 118வது நாள்!

## எழும்பூர் வடக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் உணவு வழங்கப்பட்டது!



சென்னை, ஜூன் 18-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 118வது நாள்

எழும்பூர் வடக்கு பகுதி - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி, 99 மற்றும் 99'அ' வட்டங்களில் உணவு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 118 ஆம் நாளான - கழகத்தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (17.6.2025) எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 99 - சண்முகராயன் தெரு ஓட்டேரி. 2) வட்டம் 99 அ -நேரு பார்க் TNHB, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், சொ.வேலு, வி.சுதாகர், பி.எம்.யாழினி, கோ. ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலாதேவி. மாமன்ற உறுப்பினர்கள்: பி.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, ஜி.தாமோதரன், எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்: வி. அபாய், தி.தயாளன், சு. மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்வின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல். சுந்தர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாள் விழா!

# கும்பகோணத்தில் இளம் பேச்சாளர்களின் சிறப்பு இன்னிசை பட்டிமன்றம்!

## தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!



தஞ்சை, ஜூன் 18-

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் வாணி விலாச சபாவில் இளம்பேச்சாளர்களை கொண்டு சிறப்பு இன்னிசை பட்டிமன்றம் 21.06.2025 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற உள்ளதாக மாவட்டச் செயலாளரும், சபா செயலாளருமான சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: நூற்றாண்டை கடந்து தமிழ் இயல், இசை, நாடக கலைகளை வளர்த்து வரும் கும்பகோணம் "வாணி விலாச சபா" சார்பில் "முத்தமிழறிஞர் கலைஞர்" அவர்களின் 102வது பிறந்தநாளை கொண்டாடும் விதமாக வருகின்ற 21.06.2025 சனிக்கிழமை மாலை 06.00 மணியளவில் சபா கலையரங்கில் சபா தலைவர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தலைமையில் கழகத்தின் இளம் பேச்சாளர்களை கொண்டு சிறப்பு இன்னிசை பட்டிமன்றம் நடைபெற உள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் இன்றைய இளைஞர்கள் கற்றுணர வேண்டியது சமுதாய பார்வையா அல்லது பேனாவின் கூர்மையா என்ற தலைமையில் பட்டிமன்றம் நடைபெறுகிறது.

தொலைக்காட்சி புகழ் கவிஞர் கே.காசாவயல் குமார் நடுவராகவும், கலைஞர் அவர்களிடம் இளைஞர்கள் கற்றுணர வேண்டியது சமுதாய பார்வையே என்ற வாதத்தில் இளம் பேச்சாளர்கள் கோ. இரகுநாத், இரா.செ.கபில் சாய், பாவை. பூர்ணிமாவும், பேனாவின் முனையே என்ற வாதத்தில் இளம் பேச்சாளர்கள் த.குமரவேல், தீன்ஷா அப்பாஸ், இர. காயத்ரி ஆகியோர் பேசுகிறார்கள்.

இதில் .இசைக்கலைஞர்கள் பட்டுக்கோட்டை வசந்த் மற்றும் திருவாரூர் சதீஷ் பங்கேற்கின்றனர்.

இதுசமயம் சிரித்து மகிழ்ந்து நித்தனையைத் தூண்டும் சிறப்பு பட்டிமன்ற நிகழ்ச்சியை கண்டு மகிழ கழக நிர்வாகிகள், சபா நிர்வாகிகள், பொது மக்கள் திரளாது வந்து கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இரா.ஆவுடையப்பன் – மு.அப்துல்வகாப் பங்கேற்பு!

# நெல்லை மாவட்டத்தில் மினி பேருந்து திட்டம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு - அமைச்சர் கே.என்.நேரு - அனிதா இராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தனர்!

நெல்லை, ஜுன் 18–

முதலமைச்சர் அவர்களின் புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தில் புதிய வழித்தடங்கள் மற்றும் புலம்பெயர் வழித்தடங்களுக்கான மினி பேருந்து சேவைகளை திருநெல்வேலி பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு,மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.இரா சுகுமார், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம். எல். ஏ.மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,ஆணையாளர் என்.ஓ.சுகபுத்ரா, துணை மேயர் ராஜ் முன்னாள் அமைச்சர் டி.பி.எம் மைதீன்கான் ஆகியோர் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

இந்த திட்டத்தில் நெல்லை மாவட்டத்தில் 28 புதிய விரிவான புதிய வழித்தடங்கள்,6 புலம் பெயர்ந்த வழித்தடங்கள் கண்டறியப்பட்டு முதற்கட்டமாக 8 புதிய வழித்தடமும், 6 புலம் பெயர்ந்த வழித்தடமும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வருவதால் விரதம் இருப்பது போன்ற புதுசு புதுசாக கண்டுபிடித்து பா.ஜ.க.வினர் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள்.தமிழகத்தில் நடைபெறும் பிரச்சனைகளுக்கு உடனுக்குடன் முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்.துப்பாக்கி கலாச்சாரம் என எடப்பாடி பழனிச்சாமி பேசுகிறார்,தூத்துக்குடியில் எப்படி துப்பாக்கி சூடு நடந்தது அனைவருக்கும் தெரியும்.ஒரு சிலர் செய்யும் காரியங்களை வைத்து தமிழகத்தில் முழுதாக சட்டம் ஒழுங்கு சரியில்லாமல் இது போன்ற செயல் நடைபெறுவதாக சொல்லக்கூடாது.தேர்தல் நெருங்கு வதால் தலைவர்கள் தங்களது இருப்பை காட்டிக்கொள்ள அரசின் மீது குற்றச் சாட்டை முன்வைத்து வருகிறார்கள். தமிழகத்தில் முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பல திட்டங்கள் செயல்பாட்டுக்கு வராமல் இருப்பதற்கு கடந்த ஆட்சியில் முறையாக திட்டமிடாதது காரணம்.தி.மு.க ஆட்சி அமைந்த பின்னர் பல்வேறு திட்டங்கள் மக்கள் சார்ந்த பணிகள் கட்டப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தால் கட்டப்பட்ட பெரிய பெரிய கட்டிடங்கள் வாடகைக்கு கூட விட முடியாத நிலை இருந்து வருகிறது.அதனை வாடகைக்கு விடுவதற்கு கடும் முயற்சி எடுத்து வருகிறோம்.பழைய திட்டங்களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்தால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து விடுகிறார்கள். நீதிமன்றத்தில் பெறப்பட்ட தடைகளை உடைப்பதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது.

தேர்தலுக்கான எங்கள் வேலையை நாங்கள் செய்கிறோம், எதிர்க்கட்சிகள் வேலைகளை அவர்கள் செய்கிறார்கள். நாங்கள் வென்ற இடத்தை எப்படி விடுவோம் கூடுதலாக இடங்களை பிடிப்பதற்கு தான் முயற்சி எடுக்கிறோம். அவர்கள் பிடிக்கும் இடத்தை விட நாங்கள் கூடுதலாக இடத்தை பிடிப்போம்.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு தெரிவித்தார்.

நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட அவைத் தலைவர் முருகன்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பேச்சிப் பாண்டியன், ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், கனகராஜ், முன்னாள் மேயர் சரவணன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தர்மன், சுரேஷ், கிரிஜா குமார், மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன், தினேஷ்,அயலக அணி அமிதாப்,மத்திய மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை, இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், துணைச் செயலாளர்கள் அப்துல் கையூம், பிரபு பாண்டியன், சுதா மூர்த்தி, மாநகர பொருளாளர் அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர் அருள்மணி, பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், செய்யது முகைதீன்,

அண்டன் செல்லத்துரை, நமச்சிவாயம், சங்கர்,துபாய் சாகுல், சாமுவேல், மண்டலத் தலைவர்கள் மகேஸ்வரி, கதிஜா இக்லாம் பாசிலா,மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனிதா, மாமன்ற உறுப்பினர் ஜுலியட் மேரி, உள்பட உள்ளாட்சித் பிரதிநிதி கள், கழக நிர்வாகிகள்,அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமை, மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி முன்னிலை

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகம்: வி.செந்தில் பாலாஜி திறந்து வைக்கிறார்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - எம்.பிக்கள் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் - கே.இ.பிரகாஷ் பங்கேற்பு!

நாமக்கல், ஜூன் 18 -

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் திறப்பு விழா நாமக்கல் திருச்செங்கோடு சாலையில் மலைசுற்றி ரோடு பகுதியில் இன்று (18.06.2025 புதன்கிழமை) காலை 8 மணிக்கு நடைபெற உள்ளது.

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி வரவேற்புரை ஆற்றுகிறார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்குகிறார்.

விழாவில் முன்னாள் அமைச்சரும், மேற்கு மண்டல பொறுப்பாளருமான வி செந்தில் பாலாஜி கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

தொடர்ந்து அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கழகச் கொடியேற்றி சிறப்புரையாற்றுகிறார், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், தி.மு.க. தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

இறுதியாக திருச்செங்கோடு மேற்கு நகர பொறுப்பாளரும், முன்னாள் நகர மன்ற தலைவருமான ஆர். நடேசன் திருச்செங்கோடு கிழக்கு நகரப் பொறுப்பாளரும், நகர் மன்ற துணைத் தலைவருமான தா.கார்த்திகேயன் நன்றி கூறுகின்றனர்.